1973 நவம்பர் 30]

(4) கவன ஈர்ப்பு.

(அ) கன்னியாகுமரி மாவட்டம் லட்சுமிபுரம் கல்லூரி மூடப் பட்டதும், மாணவர் பாதிப்பும் குறித்து

திரு. ஏ. பாலையா : தலைவர் அவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் "கன்னியாகுமரி மாவட்டம், லட்சுமிபுரம் கலை-விஞ் ஞான கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டு சுமார் ஒன்றரை மாதமாகியும் திறக்கப்படாமலிருப்பதால், அக்கல்லூரியில் படிக்கும் ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைபற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-சுற்றுலா அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யூர் அருகேயுள்ள லட்சுமிபுரம் கல்லூரி 3—10—1973 முதல் மூடப்பட்டுள்ளது. கல்லூரி நிர்வாகிகளுக்கும் மாணவர்களுக்குமிடையே சில பிரச்னைகளில் எழுந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக, கல்லூரி மூடப்பட்டுள்ளது என்று அறியப்படுகிறது. இது மதுரை பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரச்னை. மதுரை பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவின் ஒப்புதலுடன், துணை வேந்தர் ஒரு கமிஷனை நியமித்துள்ளதாகவும், அக்கமிஷன் தெரிவித்துள்ள கருத்துக்களின்பேரில் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தைகள் நடந்து வருவதாகவும் அறியப்படுகிறது. துணைவேந்தரிடத்திலிருந்து அதுபற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. ஏ. பாலையா : மதுரை பல்கலைக்கழகம் நிறுவிய விசாரணை கமிஷன் கல்லூரிக்கு வந்து விசாரணை நடத்திய பின்னால் நிர்வாகத் தோடும் மாணவர்களோடும் பேச்சுவார்த்தை நடத்தியதில் நிர்வாகம் கல்லூரியைத் திறக்க மாட்டேன் என்ற பிடிவாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கல்லூரியை எப்படியாவது திறந்து காலாண்டு தேர்வு நடத்தவும், ஆயிரக்கணக்கான மாணவர்களுடைய வருங்காலத்தைப் பாழாக்கக் கூடாது என்ற எண்ணத்திலும் பேச்சுவார்த்தை நடத்தியபோதும் எந்த சமரச உடன்பாட்டிற்கும் கல்லூரி நிர்வாகிகள் உடன்படாமல் தொடர்ந்து கல்லூரியை

மூடிவைத்திருக்கிருர்கள். இதிலிருந்து கல்லூரி நிர்வாகிகளுடைய எண்ணத்தில் கல்லூரியை மீண்டும் திறக்கக் கூடாது என்ற கருத்தே நிலைத்திருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு அரசு இதில் தலையிட்டு அக்கல்லூரியைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதில் அரசு எந்த அளவிற்கு தலையிட முடியும் என்று தெரியவில்லை. ஆகவேதான் பல்கலைக் கழக துணைவேந்தருடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறினேன். பல்கலைக் கழக விதிகளுக்குட்பட்டு நடவடிக்கைகள் எடுக்கவேண்டியவர்களாக இருக்கிருர்கள். அவர்கள் எடுக்காமல், அரசாங்க அளவில் எந்தளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று பல்கலைக் கழக துணைவேந்தர் குறிப்புகள் அனுப்புகிருரோ அந்தக் குறிப்புகள் மீது அரசு நடவடிக்கைகள் எடுக்கலாம். அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ருல் கிருன்டை நிறுத்துவதுதான் அரசாங்கம் செய்யக் கூடிய ஒரு பணியாக இருக்கிறது. ரெக்கக்னிஷனை வித்ட்ரா செய்வது, வைப்பது, மற்றவை பல்கலைக் கழகத்தின் பொறுப்பாக இருக்கிறது. ஆகவே, துணைவேந்தரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்று அவர்கள் கூறினுல் அந்தளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே இதுபற்றி விவரங்கள் கேட்டிருக்கிருேம். துணைவேந்தரிடத்திலிருந்து அந்த அறிக்கை வந்த பிறகு அரசு அளவில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. ஏ. பாலையா : சமரச உடன்பாட்டிற்கு கல்லூரி நிர்வாகம் வரத் தயாராயில்லை. கல்லூரியை எப்படியாவது மூடிவிட வேண்டும் என்ற ஒரு நிலையில் கல்லூரி நிர்வாகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்லூரி நிர்வாகிகளுக்கு கல்லூரியைத் திறக்கவேண்டும் என்ற எண்ணமே இதுவரையில் இல்லை. ஆகவே மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அரசாங்கம் ஏதாவது உத்தரவுகள் வழங்கி கல்லூரியை மீண்டும் திறப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். இல்லை என்று சொன்னுல் ஒரு தனி அதிகாரியை

1973 நவம்பர் 30] [திரு. ஏ. பாலையா]

யாவது நியமித்து கல்லூரியைத் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதனால் ஆயிரக்கணக்கான மாணவர்களின் படிப்பை நாம் பாதுகாக்க முடியும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் நான் முதலில் குறிப்பிட்டேன். கல்லூரிகளைக் கட்டுப்படுத்துகிற முழு அதிகாரமும் பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ளது. பல்கலைக் கழகம் தலையிடுவதன் மூலம் எந்தளவிற்கு அதை நடைமுறைப் படுத்த முடியுமோ அந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்படும். அரசாங்க உதவியோடு நடைமுறைப்படுத்த துணைவேந்தரின் அறிக்கை வந்தால் அதன்படி நடந்துகொள்ள அரசு ஆயத்தமாக இருக்கிறது. இப்போது அரசாங்கம் செய்யக்கூடியது, கிரான்ட் ஒன்றை வேண்டுமென்றால் கொடுக்காமல் நிறுத்திவிடலாம். அது தான் இப்போதுள்ள அதிகாரம். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலம் சமரச உடன்பாடு செய்யக்கூடிய ஒரு நிலை வர முடியுமானால் அதைச் செய்ய அரசு ஆயத்தமாக இருக்கிறது. எந்த அளவிற்கு முடியும், எந்த அளவிற்கு முடியாத நிலை இருக்கும் என்று எல்லாவற்றையும் ஆராய்ந்த பிறகு கலந்து கொண்டு எந்தளவிற்கு இயலுமோ அதைச் செய்ய ஆயத்தமாக இருக்கிறது அரசு.

(ஆ) போக்குவரத்துக் கழகங்கள் பயணக்கட்டணத்தை உயர்த்தி இருப்பதும் பயணிகள் அல்லலும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

DR. H. V. HANDE: I wish to call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance, namely, the hardship caused to passengers as a result of the proposed increase in the passenger fares by the various Transport Corporations.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பயணிப் பேருந்துகள் வாங்க வேண்டிய உயரளவுக் கட்டணத்தை நிர்ணயிக்கும்படி 1964 மார்ச்சில் அரசுப் போக்குவரத்து அதிகார